**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR QUARRYING BLACK GRANITE BY M/s. TAMIL NADU MINERALS LIMITED IN AN EXTENT AREA OF 6.59.91 HECTARES AT SF.NO.83(Part), JAMMANAHALLI VILLAGE, PAPPIREDDIPATTI TALUK, DHARMAPURI DISTRICT ON 25.11.2021 AT 11.00 A.M., GOVT COMMUNITY HALL, TENKARAIKOTTAI VILLAGE, PAPPIRETIPATTI TALUK, DHARMAPURI DISTRICT.**

**PRESIDING OFFICERS:**

| | | |
|---|---|---|
| 1.Tmt.S.Anitha, | : | District Revenue Officer,<br>Dharmapuri. |
| 2. Dr.A.Samuel Rajkumar, | : | District Environmental Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Dharmapuri. |

**PROJECT REPRESENTATIVES**

| | | |
|---|---|---|
| 1. Thiru. E.Ganesan, | : | The Deputy Manager (Mining lease)<br>M/s. TamilNadu Minerals Limited,<br>Chennai,<br>Tamilnadu. |
| 2. Thiru.C.Jawahar, | : | Divisional Manager ,<br>M/s. TamilNadu Minerals Limited,<br>SF.No. 83(Part),<br>Jammanahalli Village,<br>Pappiredipatti Taluk,<br>Dharmapuri District. |
| 3. Thiru K. Magenthiran | : | Assistant Manager, (Mining),<br>M/s. TamilNadu Minerals Limited,<br>Krishnagiri Division,<br>Dharmapuri District. |

**Participants list of Government staff and public is enclosed**

At the outset, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri welcomed the District Revenue Officer, Government Officials, public, social and environmental activists and others on behalf of Tamil Nadu Pollution Control Board for the public hearing on quarrying black granite by M/s. Tamil Nadu Minerals Limited over an extent of 6.59.91 Hectares in SF.No.83 (Part) of Jammanahalli village, Pappireddipatti Taluk, Dharmapuri District.

He informed that as per Ministry of Environment, Forest and Climate Change notification No. S.O. 1533 dated 14.09.2006, this category of project is listed under 1 (a) classified under 'B1' category, which mandates public consultation for granting Environment Clearance to the project. Hence, as per the Terms of Reference (ToR) guidelines issued by the State Level Environment Impact Assessment Authority (SEIAA) , the public hearing is being conducted for the said project.

Also he informed that news on the conduct of public hearing has been released on 19.10.2021 in both Tamil and English daily news papers. Further, he stated that the project proponent will make a power point presentation on the Environmental Impact Assessment made on the proposed project. After the presentation the public are requested to express their views, opinions and questions on the project and the project proponent will give their answers and explanations. Also the public were requested to say their name, village and raise their clarifications / questions.

Further, he informed that the questions raised by the public and the answers given by the project proponent will be recorded in both audio and video form and will be submitted to State Level Environment Impact Assessment Authority (SEIAA). In continuation, he requested the District Revenue Officer to preside over the public hearing meeting.

**District Revenue Officer**

The District Revenue Officer informed that M/s.Tamil Nadu Minerals Limited is a Government undertaking organization and the Government has accorded permission for quarrying activity at Jammanahalli village, Pappireddipatti Taluk, Dharmapuri District and requires Environment Clearance for the quarry.

Hence, in order to obtain Environment Clearance for the project, public hearing is being conducted. Also she stated that the project proponent will give their explanation on the project and the Environmental Impact by the project. She also asked the public to express their views, opinions and questions on the project and the project proponent will give their answers and explanations. Further,she requested the public to extend their kind co operation for the smooth conduct of the public hearing.

**Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited**

He welcomed the Government Officials and public on behalf of Tamil Nadu Minerals Limited.

- He informed that M/s. Tamil Nadu Minerals Limited is a Government Organization and the Jammanahalli quarry project will provide indirect job opportunities to the public.
- He said that as per Ministry of Environment, Forest and Climate Change notification dated 14.03.2017 the project requires Environment Clearance.
- Power point presentation on the project was made and explanation was given to the public

In continuation, the public started to express their views, opinions and questions as follows

**1. Thiru. Sivaraj,** President, **Jammanahalli** village Panchayat

He informed that Tamil Nadu Minerals Limited is in operation for the past 40 years. During that period there ~~is~~ was no untoward incident occurred in this Jammanahalli quarry. Further, he informed that there is no objection to resume the quarry operation in this subject area. He requested the Tamil Nadu Pollution Control Board to permit ~~to~~ village farmers to raise Sandal Wood and Red Sandal Wood in their own field. He requested to provide job opportunities to their village peoples on priority basis. Finally he requested to provide one community hall to the Jammanahalli Village on behalf of village people.

**Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited**

He has informed that if the community hall is constructed by Village Panchayat, Tamil Nadu Minerals Limited can provide granite slabs for its floor construction after getting necessary permission from the Managing Director, Tamil Nadu Minerals Limited.

In this regard, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, requested the public ask questions or opinion if any. Subsequently, the District Revenue Officer requested the public to ask the same. As there was no question raised by the public, the District Revenue Officer concluded the public hearing meeting.

Attendance of the public and recordings made in Pen drive is enclosed.

| | | |
|---|---|---|
| 25/11/2021 | 25/11/2021 | 28/11/2021 |
| **DEE/TNPCB** | **District Revenue Officer** | **District Collector** |
| **Dharmapuri** | **Dharmapuri** | **Dharmapuri** |
| 25/11/2021 | 2/3 | 2/3 |

**தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், ஜம்மனஹள்ளி கிராமத்தில் புல எண் : 83(பகுதி) 6.59.91 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் கருப்பு கிரானைட் குவாரியிலிருந்து கல் வெட்டி எடுத்தல் தொடர்பாக 25.11.2021 அன்று முற்பகல் 11.00 மணியளவில் அரசு சமுதாயக் கூடம், தென்கரைக் கோட்டை, பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள் :**

முன்னிலை :

| | | |
|---|---|---|
| 1. திருமதி.சு.அனிதா | : | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>தருமபுரி. |
| 2. முனைவர்.ஆ.சாமுவேல்ராஜ்குமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தருமபுரி. |

திட்ட பிரதிநிதிகள் :

| | | |
|---|---|---|
| 1. திரு.ஈ. கணேசன் | : | துணை மேலாளர் (சுரங்க குத்தகை),<br>தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம்,<br>சென்னை,<br>தமிழ்நாடு. |
| 2. திரு.சி.ஜவஹர் | : | கோட்ட மேலாளர்,<br>புல எண் : 83(பகுதி),<br>தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம்,<br>ஜம்மனஹள்ளி கிராமம்,<br>பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்,<br>தருமபுரி மாவட்டம். |
| 3. திரு.கி.மகேந்திரன் | : | உதவி மேளாளர்,(சுரங்கம்),<br>தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம்,<br>கிருஷ்ணகிரி கோட்டம்,<br>தருமபுரி மாவட்டம் |

கலந்து கொண்ட அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி

மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், பொதுமக்கள் அனைவருக்கும் எனது முதற்கண் எனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், ஜம்மனஅள்ளி கிராமம், புல எண் : 83 (பகுதி) 6.59.91 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கருப்பு கிரானைட் குவாரிக்கு அனுமதி வழங்குவது சம்பந்தமாக நடத்தப்படும் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், அரசுத்துறை அதிகாரிகளையும், பொதுமக்கள், சமூக மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் இங்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் வருக வருக என வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒன்றிய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 14.09.2006 அன்று வெளியிட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை எண் : S.O.1533-ன் படி வெளியிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரிவு 1(a)-ன் கீழ் இக்குவாரி வருவதாலும் மற்றும் இத்தொழில் வகைப்பாடு "B1" என்ற பிரிவின் கீழ் வருவதாலும் இக்குவாரியை இயக்க சுற்றுச்சூழல் அனுமதி வழங்க பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. அதன்படி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி மேற்கூறிய கருப்பு கிரானைட் குவாரிக்கு அனுமதி வழங்குவது சம்பந்தமாக இன்று இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்புரைக்கான பொது அறிவிப்பு (பத்திரிக்கை செய்தி) மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் 19.10.2021 அன்று தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகளில் வெளியிடப்பட்டுள்ளது. முதலில் இக்குவாரிப்பணி சம்பந்தமான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்த விபரங்களை தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவன நிர்வாகத்தினர் மற்றும் சுற்றுச்சூழல் ஆலோசகர்கள் நிழற்படம் மூலம் தற்போது எடுத்துரைப்பார்கள்.

அதன் பிறகு பொதுமக்கள் இது சம்மந்தமாக தங்களுடைய கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் ஆகியவற்றை கேள்விகளாக கேட்டால் அதற்கு இத்திட்டத்தின் நிறுவனத்தினர் தகுந்த விளக்கங்களையும், பதில்களையும் அளிப்பார்கள். பொதுமக்கள் ஒவ்வொருவராக தங்கள் பெயர் மற்றும் ஊர் குறித்த தகவல்களை தெரிவித்துவிட்டு தங்கள் கருத்துக்களை இங்கு பதிவு செய்யலாம். அதற்கு இந்நிறுவனத்தினர் தங்கள் விளக்கத்தினை அளிப்பார்கள்.

தாங்கள் கேட்கும் கேள்விகள் மற்றும் இத்திட்டத்தின் நிறுவனத்தினர் அளிக்கும் பதில்கள் ஆகியவை ஒலி மற்றும் ஒளி அதாவது ஆடியோ மற்றும் வீடியோ மூலமாக பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை இக்கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட வருவாய் அலுவலர்

பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் ஜம்மனஹள்ளி கிராமத்தில் தமிழ்நாடு கனிம நிறுவனம் மூலமாக கிரானைட் சுரங்கம் செயல்பட சுற்றுச்சூழல் அனுமதி கோரும் மனுவின் மீது பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் தருமபுரி மாவட்ட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் அனைத்து பொதுமக்கள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு கனிம நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனம் அரசு சார்பில் ஜம்மனஹள்ளி கிராமத்தில் கிரானைட் கனிம வளம் எடுப்பதற்கு உரிமம் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு இந்தப் பகுதியில் கருத்துக் கேட்டு அதனடிப்படையில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் அதற்காக பொதுமக்களிடையே கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது. தற்போது இத்திட்டத்தைப் பற்றியும், சுற்றுச்சூழல் தாக்கம் பற்றியும் முழுமையாக தெரியப்படுத்துவார்கள். பொதுமக்கள் இது சம்மந்தமாக தங்களுக்கான சந்தேகங்கள் ஏதும் இருந்தால் கேட்கலாம். உங்கள் சந்தேகங்களுக்கு தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவன அலுவலர் உரிய பதிலினை வழங்குவார்கள்.

எனவே, பொதுமக்கள் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு ஒத்துழைத்து சுமூகமாக நடத்தி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

**திரு.ஈ.கணேசன், துணை மேலாளர் (சுரங்க குத்தகை)**

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பாக அரசு உழியர்கள் மற்றும் பொதுமக்களை வரவேற்றார்.

- தமிழ்நாடு கனிம நிறுவனம் அரசு நிறுவனம் எனவும் இங்கு மறைமுக வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தி தருவதற்கு ஏதுவாக ஜம்மனஹள்ளி கிராமத்தில் இக்குவாரி திட்டம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றார்.
- இந்த கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அறிவிக்கை நாள் : 14.03.2017 ன் படி சுற்றுச்சூழல் அனுமதி பெறவேண்டி இருக்கின்றது.

❖ இத்திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Powerpoint Presentation) மூலம் பொதுமக்களுக்கு விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து கூட்டத்தில் உள்ள பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்க தொடங்கினார்கள். அவை பின்வருமாறு

1. திரு.சிவராஜ், ஊராட்சிமன்றத் தலைவர், ஜம்மனஹள்ளி

கடந்த 40 ஆண்டுகளாக தமிழ்நாடு கனிம நிறுவனம் செயல்பட்டு வருகிறது, மேற்படி காலங்களில் இந்த கிரானைட் குவாரியில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்க வில்லை. இந்தக் குவாரி தொடங்கப்படுவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார். மேலும், தங்கள் ஊரில் உள்ள விவசாயிகளுக்கு விலை மதிப்புள்ள மரங்களான சந்தனம் மற்றும் செம்மரக் கன்றுகளை வழங்கியும் வளர்க்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார். இக்குவாரியில் பணியாற்ற தங்கள் பஞ்சாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதியில் ஒரு சமுதாயக் கூடம் அமைத்துத்தருமாறும் ஜம்மனஹள்ளி பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொண்டார்.

திரு.இ.கணேசன், துணை மேலாளர்

இதனைத்தொடர்ந்து, ஜம்மனஹள்ளி பஞ்சாயத்தில் தாங்கள் சமுதாயக்கூடம் கட்டும்பட்சத்தில் அதன் தரைத்தளத்திற்கு கிரானைட் பலகைகளை ~~கள் வழங்க~~ தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம், அதன் மேலாண் இயக்குநரிடம் ஒப்புதல் பெற்று வழங்க பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக ஏதேனும் கருத்துக்களோ கேள்விகளோ இருந்தால் தெரிவிக்கும்படி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து எந்த கேள்விகளும் எழாத காரணத்தால் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ஏதேனும் கேள்வி இருந்தால் கேட்கும்படி கேட்டுக்கொண்டு, கேள்வி எதுவும் எழாதபட்சத்தில் இக்கருத்துக் கேட்புக் கூட்டம் நிறைவு செய்யப்படுகிறது என்று அறிவித்தார். நிறைவாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் நன்றி தெரிவிக்க கருத்துக் கேட்புக் கூட்டம் நிறைவு பெற்றது.

பொதுமக்கள் கருத்து கேட்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் பட்டியல், நடைபெற்ற கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் (CD) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 25/11/2021 | 25/11/2021 | 25/11/2021 |
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>தருமபுரி | மாவட்ட வருவாய் அலுவலர்<br>தருமபுரி | மாவட்ட ஆட்சித்தலைவர்<br>தருமபுரி |
| | 3/3 | 3/3 |